த.வெ.க. பதவியேற்ற பத்து நாட்களிலேயே

சட்டப்பேரவை துணைத் தலைவர் - எம்.எல்.ஏ.க்கள் அராஜகம்!

காவல் நிலையம் – அரசு அலுவலகங்களில் புகுந்து மிரட்டல்!

பொய்யான தகவல்கள்!

கேள்விக்குள்ளாகும் த.வெ.க. எம்.எல்.ஏ.க்களின் கல்வித் தகுதி!

எப்படி நேர்மையான மாற்றத்தைத் தருவார்கள்?

சென்னை, மே 22 - தமிழக வெற்றிக் கழகத்தின் ஆதரவாளர்கள் சமூக வலைதளங்களில் தவெக சார்பில் வென்ற சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் கல்வித் தகுதியுடையவர்கள் எனப் பதிவிட்டு வந்தனர். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் தங்களின் வேட்புமனுவில் குறிப்பிட்டிருக்கும் கல்வித்தகுதி தொடர்பான தகவல், அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது விளம்பரப்படுத்துவது இரண்டும் முரணாக உள்ளது என்று சமூக வலைதளங்களில் விமர்சனம் எழுந்தது.

இந்தச்சூழலில் தவெக சட்டமன்ற உறுப்பினர்களின் கல்வித்தகுதி தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தியுள்ளது. அந்த நிறுவனம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பார்த்தால், தவெகவினரின் பொய்கள் அம்பலப்படுகிறது. இந்நிலையில், தவெக சட்டமன்ற உறுப்பினர்களின் கல்வித்தகுதி தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

★ பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அடுத்த மாதம் தனது அம்மாவின் வீட்டிற்கு வாடகை கூடச் செலுத்த முடியாத ஒருவரை முதல்வர் விஜய் அமைச்சராக ஆக்கியுள்ளார் என்று பேட்டியில் கூறினார். ஆனால், அவர் சில மாதங்களுக்கு முன்னர் கோடிக்கணக்கில் மதிப்புள்ள சொகுசு வீடு வாங்கியபோது அவர் எடுத்த காணொளியைத் தனது சமூக வலைதளப்பக்கத்தில் பகிர்ந்துள்ளார். மேலும், அவரின் கல்வித் தகுதியும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

அவர் தனது வேட்புமனுவில் 2010ம் ஆண்டு இந்திய வணிக மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் வணிக மேலாண்மை பட்டயப் படிப்பு முடித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அவர் குறிப்பிட்டுள்ள கல்வி நிறுவனம் எந்த அரசு அமைப்பாலும் அங்கீகரிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

★ தவெக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் பிபிஏ மட்டுமே படித்துள்ளதாகத் தனது வேட்புமனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவர் தேர்தல் பரப்புரையின்போது எம்பிஏ படித்துள்ளதாக விளம்பரப்படுத்தியுள்ளார்.

★ பத்தாம் வகுப்பு மட்டுமே படித்துள்ள தஞ்சாவூர் தவெக சட்டமன்ற உறுப்பினர் விஜய் சரவணன் பி.பி.ஏ. பட்டம் பெற்றதாகப் பொய்யாகப் பரப்புரை செய்துள்ளார்.

★ தவெக ஆவடி சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ்குமார் பிபிஏ மட்டுமே படித்துள்ளதாக வேட்புமனுவில் கூறியுள்ளார். ஆனால், பரப்புரையின் போது 'டாக்டர்' என விளம்பரப்படுத்தியுள்ளார். அவரிடம் மருத்துவ அல்லது முனைவர் பட்டம் இல்லாத நிலையில், போஸ்டரில் 'டாக்டர்' எனப் போலிப் பட்டத்தைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

★ தவெக விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் செல்வம் சிவில் இன்ஜினியரிங் டிப்ளமோ மட்டுமே படித்துள்ளார் என்று அவரது தேர்தல் வேட்புமனு காட்டுகிறது. ஆனால், அவர் பரப்புரையின்போது 'டாக்டர்' எனத் தெரிவித்துள்ளார். அவரிடம் மருத்துவ அல்லது முனைவர் பட்டம் இல்லாத நிலையில், போஸ்டரில் 'டாக்டர்' எனப் போலிப் பட்டத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

★ குமாரபாளையம் தவெக சட்டமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி தனது தேர்தல் வேட்புமனுவில் 12ம் வகுப்பு மட்டுமே கல்வித் தகுதியாகக் குறிப்பிட்டுள்ள நிலையில், தேர்தல் பரப்புரையின் போது தன்னைப் பட்டதாரி என விளம்பரப்படுத்தியுள்ளார்.

★ போளூர் தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர் அபிஷேக், தான் சாப்ட்வேர் இன்ஜினியரிங் படித்துள்ளதாக வேட்புமனுவில் தெரிவித்துள்ள நிலையில், அவர் விளம்பரங்களில் எம்பிஏ படித்துள்ளதாகக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

★ தவெக அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் 10ம் வகுப்பு மற்றும் 'ஏடிசிஏ' கணினி சான்றிதழ் படிப்பு மட்டுமே முடித்துள்ளார் என்று அவரது வேட்புமனுவில் கூறியுள்ளார்.

ஆனால், தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகளை முடித்துள்ள தாக விளம்பரப்படுத்தி யுள்ளார். இந்தத் தகவல்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்து வரும் நெட்டிசன்கள் தங்களின் உண்மையான கல்வித்தகுதியைச் சொல்லாமல் பொய்யான தகவல்களைச் சொல்லிப் பதவிக்கு வந்துள்ள இவர்கள் எப்படி நேர்மையான மாற்றத்தைக் கொடுப்பார்கள் என்ற கேள்வியை எழுப்பி வருகிறார்கள்.

அதிகாரியை மிரட்டிய பேரவை துணைத் தலைவர்!

பொதுமக்கள் முன்னிலையில் தரக் குறைவான பேச்சு!

திருச்சி, மே 22 - திருச்சி மாவட்டம் துறையூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இதற்காக பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு வரும் நிலையில் பயணிகள் வசதிக்காக சொரத்தூர் சாலையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பழைய இடத்திலிருந்து தற்காலிக பேருந்து நிலையத்திற்கு பயணிகளை ஏற்றி செல்ல நகர பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இப்பணிகளை ஆய்வு செய்வதற்காக துறையூர் தொகுதி எம்.எல்.ஏ.வும், தமிழக சட்டப்பேரவை துணை சபாநாயகருமான ரவிசங்கர் நேற்று முன்தினம் இரவு அப்பகுதிக்கு வந்தார்.

அப்போது அங்கு பணியில் இருந்த அரசு போக்குவரத்துக்கழக உதவி மேலாளர் உதயகுமார் என்பவரை நோக்கி துணை சபாநாயகர் ரவிசங்கர் பாய்ந்தார். பொதுமக்கள் முன்னிலையிலேயே 'நீங்களெல்லாம் ஒரு அதிகாரியா? அரை மணி நேரமாக பேருந்து இல்லை என்கிறார்கள்.

உங்கள் வீட்டு பெண்கள் என்றால் இப்படி நடந்து போவார்களா? நேற்று ஒருவர் மயங்கி விழுந்துவிட்டார்... என்ன வேலை பார்க்கிறீர்கள்?' என ஏகத்துக்கும் சத்தம் போட்டு 'அர்ச்சனை' செய்தார். அதிகாரியை அவர் திட்டி தீர்த்த அடுத்த சில நிமிடங்களில், அந்த வீடியோ கட்சி நிர்வாகிகளின் வாட்ஸ் அப் ஸ்டேட் டஸ்களிலும், சமூக வலைதள 'ரீல்ஸ்' களிலும் 'தலைவரின் அதிரடி ஆக்ஷன்' என்ற பின்னணி இசையோடு வலம் வரத்தொடங்கியது.

இதை பார்த்த பொதுமக்கள், துணை சபாநாயகர் ஆய்வு செய்ய வந்தாரா?.... இல்லை சோசியல் மீடியாவுக்கு கன்டென்ட் எடுக்க வந்தாரா?... என்று முணுமுணுக்க தொடங்கினர்.

இதுகுறித்து போக்குவரத்து துறை அலுவலர்களிடம் விசாரித்தபோது, பேருந்து நிலைய பணிகள் நடப்பதால் சில நடைமுறை சிரமங்கள் இருப்பது உண்மை தான்.

குறைகள் இருந்தால் தனி அறையிலோ அல்லது அரசு ரீதியாகவோ சுட்டிக் காட்டி சரி செய்ய சொல்வதுதான் மக்கள் பிரதிநிதியின் கடமை. அதை விடுத்து, கட்சி தொண்டர்கள் மத்தியில் 'மாஸ்' காட்டுவதற்காக, பொதுமக்கள் முன்னிலையில் ஒரு அரசு அதிகாரியை தரக்குறைவாக நடத்துவது எந்த விதத்தில் நியாயம்? என வேதனையுடன் தெரிவித்தனர்.

நகராட்சி கமிஷனர் சீட்டில் அமர்ந்து

த.வெ.க. பெண் எம்.எல்.ஏ. அடாவடி!

வேலூர், மே 22 - வேலூர் மாவட்டம் குடியாத்தம் சட்டமன்றம் தனி தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்ட சிந்து என்பவர் வெற்றி பெற்றார். இவர் வாக்கு சேகரிக்க தொகுதி முழுவதும் செல்லவில்லை. வெற்றி பெற்ற பின்னர் நன்றி தெரிவிக்கவும் செல்லவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். தற்போது தொகுதி மக்கள் எம்.எல்.ஏ. சிந்துவின் முகம் கூட காணாமல் வாக்களித்தது தவறாகிவிட்டது என புலம்பி வருகின்றனர். இந்நிலையில் எம்.எல்.ஏ. சிந்து குடியாத்தம் பஸ் நிலையம் அருகில் உள்ள நகராட்சி அலுவலகத்திற்கு நேற்று சென்றார். அப்பொழுது நகராட்சி கமிஷனர் அறைக்குள் சென்று அவரது இருக்கையில் அமர்ந்துள்ளார்.

பின்னர் நகராட்சி ஆணையாளர் தனலட்சுமியை இன்னொரு நாற்காலி போட்டு அமர வைத்துவிட்டு தற்போது என்ன வளர்ச்சி திட்ட பணிகள் நடக்கிறது? என கேட்டுள்ளார். இந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. எம்.எல்.ஏ., நகராட்சி ஆணையாளரின் இருக்கையில் அமரக்கூடாது என்று சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்து பதிவு செய்து வருகின்றனர்.

அதில் தமிழ்நாடு நகராட்சி சட்டத்தின்படி நகராட்சி கமிஷனர் தான் நகராட்சியின் நிர்வாகத் தலைவர். சட்டமன்ற உறுப்பினருக்கு நகராட்சி கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர் அந்தஸ்து தான். சட்டமன்ற உறுப்பினர், கமிஷனர் அறையில் அவரது தலைமையில் கூட்டம் நடத்தலாம்.

ஆனால் கமிஷனர் நாற்காலியில் அமரக்கூடாது. மக்கள் பிரச்சினைகளை கமிஷனரிடம் தெரிவிக்கலாம். இதுபோன்று அட்ராசிட்டி செய்வது சட்டப்படி தவறு, அதிகார துஷ்பிரயோகம் என்பது உள்ளிட்ட கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

தலைநகர் சென்னையிலேயே போலீஸ் நிலையத்தில் புகுந்து

இன்ஸ்பெக்டரை மிரட்டிய த.வெ.க. எம்.எல்.ஏ.!

கடும் வாக்குவாதம்!

சென்னை, மே.22 - காதலனின் திருமணத்தை நிறுத்தக்கோரி இளம் பெண் போராட்டம் நடத்தினார். அவருடன் வந்தவரை தாக்கியதாக இன்ஸ்பெக்டருடன் த.வெ.க. எம்.எல்.ஏ. வாக்கு வாதம் செய்ததால் பரப ரப்பு ஏற்பட்டது.

ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த இளம்பெண் ஒருவர், தற்போது சென்னை வேளச் சேரியில் வசித்து வருகிறார். அவரும், சென்னை சூளை மேடு பகுதியைச் சேர்ந்த வாலிபரும் காதலித்து வந்த தாக கூறப்படுகிறது. இதற்கிடையில் அந்த வாலிபர், இளம்பெண்ணை திருமணம் செய்ய மறுத்ததாக தெரி கிறது.

இதுபற்றி இளம்பெண், அரும்பாக்கம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீ சார், வாலிபரை கைது செய்து நீதிமன்ற ஜாமீனில் விடுவித்ததாக கூறப்படுகிறது. இந்தநிலையில் தன்னை காதலித்து திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றிய காதலனுக்குநேற்று வேறொரு பெண்ணுடன் நுங்கம்பாக் "கத்தில் உள்ள ஒரு பள்ளிவாசலில் திருமணம் நடைபெற்ற தையும், அவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி ராயபுரத்தில் உள்ள ஒரு திரு மண மண்டபத்தில் நடைபெ றுவதையும் அறிந்த இளம் பெண் அதிர்ச்சி அடைந்தார். இதையடுத்து தனது ஆதர வாளர்கள் சிலருடன் திரு மண மண்டபத்துக்கு சென்ற இளம்பெண், தன்னை காதலித்து திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றிய காதலனின் திருமணத்தை நிறுத்தக்கோரி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த ராயபுரம் அனைத்து மகளிர் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட இளம் பெண் மற்றும் அவரது ஆதர வாளர்களை போலீஸ் நிலையம் அழைத்துச்சென்றனர். அப்போது இளம் பெண்ணுக்கு ஆதரவாக போலீஸ் நிலையம் வந்த கலில் அகமது என்பவரை இன்ஸ்பெக்டர் சிதம்பர பாரதி கையால் தாக்கி கீழே தள்ளிவிட்டதாக கூறப்படுகிறது. இதில் மயங்கி விழுந்த அவரை மீட்டு சிகிச் சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

எம்.எல்.ஏ. வாக்குவாதம் இதுபற்றி அறிந்த ராயபுரம் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. விஜய் தாமு, போலீஸ் நிலை யம் சென்று, "உங்களுக்கு பொதுமக்களை அடிக்கும் உரிமையை யார் கொடுத் தது?" என கேட்டு இன்ஸ் பெக்டருடன் வாக்குவாதம் செய்தார். மேலும் இரு தரப்பையும் போலீஸ் நிலையம் அழைத்து வரா மல், பணம் வாங்கிக் கொண்டு பாதிக்கப்பட்ட பெண்ணை மட்டும் அழைத்து வந்ததாக குற்றம் சாட்டியதுடன், பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரின்பேரில் அவரை ஏமாற்றிய வாலிபர் மீது சட்ட ரீதியான நடவடிக்கையை ஏன் மேற்கொள்ளவில்லை? என வும் எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பினார்.

பதிலுக்கு இன்ஸ்பெக்டர் சிதம்பர பாரதி, இந்த வழக்கு தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டது வேறொரு போலீஸ் நிலையம். ஆனால் இங்கு நடந்த திருமணத்தை இளம்பெண் தடுத்து நிறுத்த

அவரை முயன்றதால் அழைத்து வந்து எழுதி வாங்கிவிட்டு அனுப்பி விட்டதாக வும் கூறினார். இதனால் எம். எல்.ஏ. மற்றும் இன்ஸ்பெக்டர்இடையேபோலீஸ் நிலை யத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து வண்ணாரப்பேட்டை துணை கமிஷனர் பாஸ்கரன் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தார்.

குமரி மாவட்டத்தில்

பேரூராட்சித் தலைவியை மிரட்டிய த.வெ.க.வினர்!

லெட்டர்பேடு, முத்திரைகளை திருடிச் சென்ற கொடுமை!

கருங்கல், மே 22 - கன்னியாகுமரி மாவட்டம் கீழ்குளம் பேரூராட்சித் தலைவராக தி.மு.க.வைச் சேர்ந்த சரளா கோபால் கடந்த நான்கு ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறார். இந்நிலையில், நேற்று முன்தினம் அவர் அலுவலகத்தில் இல்லாத நேரத்தை பயன்படுத்திக் கொண்ட தவெக குமரி மேற்கு மாவட்டச் செயலாளர் சபின் மற்றும் நிர்வாகிகள் பேரூராட்சி அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

அங்குத் தலைவரின் அறைக்குள் புகுந்த அவர்கள், சுவரில் இருந்த முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் புகைப்படங்களை அடித்து சேதப்படுத்தினர்.

மேலும், தலைவரின் மேஜையிலிருந்த அதிகாரப்பூர்வ லெட்டர் பேடு மற்றும் முத்திரைகளை (சீல்) திருடிச் சென்ற தோடு, இந்தச் செயல்களைக் காணொளியாகப் பதிவு செய்து சமூக வலைதளங்களிலும் பரப்பினர்.

இதன் தொடர்ச்சியாக, இரண்டாவது நாளான நேற்று முன்தினம் த.வெ.க. வினர் கும்பலாக மீண்டும் பேரூராட்சி அலுவலகத்திற்குள் புகுந்தது. அப்போது அலுவலகப் பணியில் இருந்த பேரூராட்சித் தலைவி சரளா கோபாலை வழிமறித்த அக்குழுவினர், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, கொலை மிரட்டல் விடுத்தனர். இதற்கு அங்கிருந்த மற்ற கவுன்சிலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அரசு அலுவலகத்திற்குள் அத்துமீறிப் புகுந்து பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியது, முக்கிய ஆவணங்களை திருடிச் சென்றது மற்றும் பெண் தலைவருக்குக் கொலை மிரட்டல் விடுத்த த.வெ.க. நிர்வாகிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி சரளா கோபால் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அறிவிப்பின்படி வழக்கறிஞர் ரவீந்திரன் மற்றும் மாநில மாணவர் அணி அமைப்பாளர் ஜெ.வீரமணி ஆகியோர் கீழ்க்கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

செஞ்சி சட்டமன்ற தொகுதி- நாள்-25.05.2026 திங்கட்கிழமை

ஒன்றியம்/பேரூர்	நேரம்	இடம்
செஞ்சி கிழக்கு ஒன்றியம்	காலை 10.00 மணி	வள்ளி அண்ணாமலை திருமண மண்டபம் , செஞ்சி
செஞ்சி மேற்கு ஒன்றியம்		
செஞ்சி மத்திய ஒன்றியம்		
மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம்		
மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம்		
மேல்மலையனூர் மத்திய ஒன்றியம்		
செஞ்சி பேரூர்		
அனந்தபுரம் பேரூர்		

மயிலம் சட்டமன்ற தொகுதி- நாள்-26.05.2026 செவ்வாய்கிழமை

ஒன்றியம்	நேரம்	இடம்
வல்லம் வடக்கு ஒன்றியம்	காலை 10.00 மணி	R.R மஹால் (A/C) தீவனூர்
வல்லம் தெற்கு ஒன்றியம்		
வல்லம் மத்திய ஒன்றியம்		
மயிலம் வடக்கு ஒன்றியம்		
மயிலம் தெற்கு ஒன்றியம்		
மயிலம் மத்திய ஒன்றியம்		
ஒலக்கூர் மேற்கு ஒன்றியம்		

திண்டிவனம் சட்டமன்ற தொகுதி- நாள்-27.05.2026 புதன்கிழமை

நகரம்/ஒன்றியம்/பேரூர்	நேரம்	இடம்
ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம்	காலை 10.00 மணி	ஹோட்டல் ஆரியாஸ் (A/C) ஹால் திண்டிவனம்
மரக்காணம் கிழக்கு ஒன்றியம்		
மரக்காணம் மேற்கு ஒன்றியம்		
மரக்காணம் மத்திய ஒன்றியம்		
திண்டிவனம் நகரம்		
மரக்காணம் பேரூர்		

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 21.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.